**கவனிக்க.**-02.11.2017 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2045 - 2017 නොවැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2017.11.10

*2045 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள் | 164 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலையம் (திருத்தம்) சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) நம்பிக்கைப் பொறுப்புக்கள் (திருத்தம்) சட்டமூலம் 2017, நவெம்பர் மாதம் 02 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2017, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2017, நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


163- B81224-353(2017/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச்சட்ட அறிவித்தல்கள்

*இணைப்பு 9*

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

மத்திய மாகாண சபையின் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள குண்டசாலைபிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளர் ஆகிய சமந்தி தில்ருக்ஷிகா நாகஹதென்ன ஆகிய நான் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின் கீழ் அதிஉத்தமராம் சனாதிபதி அவர்களினால், 1984.11.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/ப்ர/3724 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான தியபுபுல குடியேற்றம் எனும் முகவரியில் வசிக்கும் பலி அபன்னலாகே கெதர என்பவருக்கு கையளிக்கப்பட்டு கண்டி மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் ஈ/195/96 ஆம் இலக்கத்தின் கீழ் 1995.05.15 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2017.11.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

கண்டி நிருவாக மாவட்டத்தின் குண்டசாலை பிரதேச செயலாளர் பிரிவின் உடகம்பஹ கோரளையிலுள்ள கெங்கல்ல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மெதவெல்ல (தியபுபுல ஜனபதய) எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், ........ என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும், நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு ........... ஆம் இலக்க வெளிக்களத் தாளில்/........ என்பவரால் தயாரிக்கப்பட்டு பிபிமஹ 2345 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் .........../...... என்பவரால் தயாரிக்கப்பட்ட .......... இரேகை வரைதலில் 63 ஆம் இலக்கக் காணித்துண்டெனக் காட்டப்பட்டதும் 0.125 ஹெக்டெயர்/ஏக்கர் - றூட் - பேர்ச்சஸ் ....... விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: வடக்கில் : காணித்துண்டு இலக்கம் 49; கிழக்கில்: காணித்துண்டு இலக்கம் 20; தெற்கில் : காணித்துண்டு இலக்கம் 68; மேற்கில் : காணித்துண்டு இலக்கம் 62.

எஸ். டி. நாகஹதென்ன,
குண்டசாலை பிரதேச செயலாளர்,
மெனிக்ஹின்ன.

2017, ஓகத்து 19.

11-426

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.